[1983 பிப்ரவரி 9

(முற்பகல் 9–40)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்களுக்கு இந்த ஊர்தி யைப் பற்றி சரியான தகவல் கிடைக்க பெறவில்லை என்று நினைக்கிறேன். மாணவர்களை அழைத்துக் கொண்டு போவதற்காக பயன்படுத்தப்படும் ஊர்தி அல்ல அது. நடமாடும் மருத்துவமனை என்று செல்லப்படும் மொபைல் ஹாஸ்பிடல்லாக re–ori ntation of medical educat on என்ற தலைப்பின் கீழ் கொடுக்கப்பட்ட ஊர்தி. ஒரு மருத்துவமனைக்கு தேவையான எல்லா வசதிகளும் இருக்கின்றன. மாணவர்களையும் ஹவுஸ் சர்ஜன்களையும், மற்றும் டாக்டர்களையும் அழைத்துப்போவதற்காக தனியாக 1 இலட்சம் ரூபாய் செலவில் வேறு ஒரு ஊர்தி இருக்கிறது. ஆனால் நடமாடும் மருத்துவமனைகளாக 24 ஊர்திகள் செயல்படுகின்றன. இவைகள் முறையாக திறமையாக செயல்பட்டு வருகின்றன; நானும் போகிற போதெல்லாம் பார்த்துக் கொண்டு வருகிறேன். திடீரென்று சோதனைகளும் செய்திருக்கிறேன். தனியாக செக்கிங் சிஸ்டம் ஒன்றையும் ஏற்படுத்தியிருக்கிறேன். ஆகவே. இதிலே பிரச்னை எதுவும் இல்லை.

ஈரோட்டிலுள்ள மாவட்ட தலைமை மருத்துவமனை

*வினா எண் 94—திரு ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு நகரில் உள்ள பெரியார் மாவட்ட தலைமை மருத்துவமனையில் காசநோய்ப் பிரிவில் இடவசதியும், படுக்கை வசதியும் மிகவும் குறைவாக உள்ளதால், நோயாளிகள் அவதிப் படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) படுக்கைகள் அதிகப்படுத்தும் அளவிற்கு புதிய கட்டடம் ஒன்று காசநோய் பிரிவிற்கு கட்ட அரசு நிதி உதவி அளிக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) & (ஆ): பெரியார் மாவட்டத்திலுள்ள தலைமை மருத்துவமனையில் முழு அளவில் பயன்தரக்கூடிய காசநோய் நிலையம் ஒன்று உள்ளது. இது நல்ல இடவசதிருள்ள தனிக் கட்டிடத்தில் அமைந்துள்ளது. இம்மருந்தக நிலையத்தில் 12 படுக்கைகள் கொண்ட காசநோய் வார்டு ஒன்றும் 20 படுக்கைகள் கொண்ட காசநோய் வார்டு ஒன்றும் 1–10–81 முதல் இயங்கி வருகின்றன.